**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 111** **நாள்: 18.08.2016**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்</u>**
**<u>“அம்மா வாரச்சந்தை” தொடங்க</u>**
**<u>மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் தலைமையில் கலந்தாய்வு !</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 17.08.2016 அன்று அம்மா மாளிகையில் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்களின் தலைமையில், ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில், 45 வங்கிகளின் பிரதிநிதிகள், 25 சேவைத்துறைகளின் பிரதிநிதிகள், 27 ஏற்றுமதியாளர்களின் பிரதிநிதிகள் என மொத்தம் 97 பிரதிநிதிகளுடன் அம்மா வாரச்சந்தை அமைப்பதற்கான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அம்மா வாரச்சந்தை முதற்கட்டமாக சென்னையின் மூன்று வட்டாரங்களிலும் தலா ஒரு இடம் வீதம் மூன்று இடங்களில் பரிட்சார்த்த அடிப்படையில் துவங்கப்படும். அவைகள் வடக்கு வட்டாரத்தில் ஆர்.கே.நகர் தொகுதி, மத்திய வட்டாரத்தில் அசோக் நகர் 11வது அவென்யூ, தெற்கு வட்டாரத்தில் பழைய மகாபலிபுரம் சாலை என முடிவு செய்யப்பட்டது.

முதன்முறையாக துவங்க இருப்பதால் பொருட்களை விற்பனைக்கு கொண்டுவரும் உற்பத்தியாளர்கள், நுகர்வோர்களுக்கு ஏற்படும் சாதக பாதகங்களை பரிசீலித்து அடுத்தகட்டமாக, அரும்பாக்கம், மிண்ட்பாலம் கீழே, வளசரவாக்கம்–சேத்துப்பட்டு தார்க்கலவை நிலையம் மற்றும் மெரீனா கடற்கரை ஆகிய இடங்களுக்கு விரிவுபடுத்தலாம் என முடிவு செய்யப்பட்டது.

1. அம்மா வாரச்சந்தை காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை இருக்கலாம் எனவும், கொண்டுவரும் பொருட்கள் உடனே தீர்ந்துவிட்டால் மாற்று ஏற்பாடு என்ன செய்ய வேண்டும் எனவும், அதற்கு தீர்வாக சந்தை நேரம் நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.
2. அம்மா வாரச்சந்தை காலை 6 மணி முதல் ஆரம்பிக்கப்படுவதால், பொருட்களை கொண்டு வருபவர்கள் முதல் நாள் மாலை 6 மணி முதல் கொண்டு வந்து தங்கள் சொந்த பொறுப்பிலேயே பாதுகாத்து கொள்ள வேண்டும்.
3. பொருட்கள் தரமானதாகவும், வெளிவிலையை விட குறைவாகவும் இருக்க வேண்டும்.
4. தரம், எடை மற்றும் விலையை உற்பத்தியாளரும், தயாரிப்பாளரும் முன்கூட்டியே மூடிய கடிதத்தில் என்னென்ன பொருட்கள், அதன் விலை, தொடர்பு அதிகாரி மற்றும் தொடர்பு

கொள்ள வேண்டிய தொலைபேசி எண் போன்ற விவரங்களை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

5. அம்மா வாரச்சந்தையில் கடைகள் அமைக்க கூடாரம், மின்விளக்கு, மின்விசிறி, குடிநீர்வசதி, கழிவறை சுத்தம், சுகாதாரம் போன்றவை இலவசமாக மாநகராட்சியே அமைத்து தரும்.
6. போக்குவரத்து, சட்டம், ஒழுங்கு மற்றும் குற்ற செயல்கள் ஆகியவை காவல்துறையால் நிர்வகிக்கப்படும்.
7. சைவ, அசைவ பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களுக்கு தனித்தனியாக இடம் ஒதுக்கீடு செய்யப்படும்.
8. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள சேவைத்துறைகள், வங்கிகள், ஏற்றுமதியாளர்களின் கூட்டத்தையும், சேவைத்துறைகள் தங்கள் துறைகளின் மாவட்ட பிரதிநிதிகளின் கூட்டத்தையும் கூட்டி ஆலோசித்து பொருட்களை கொண்டு வரும் தயாரிப்பாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்க வேண்டும்.
9. சேவைத்துறைகள் தங்கள் துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளை முதல்நாள் மாலை 6 மணிக்கு சம்பந்தப்பட்ட நிர்ணயம் செய்யும் பிரதிநிதியால் பெற்று, அவர்கள் துறை தொடர்பாக வரும் விற்பனையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் திரும்பி செல்லும் வரை அவர்களுக்கு தேவையான வசதிகளை ஒருங்கிணைப்பு செய்ய வேண்டும்.
10. சேவைத்துறைகள், வங்கிகள், ஏற்றுமதியாளர்கள், மாவட்ட ஆட்சியர்களை தொடர்பு கொள்ள வசதியாக மாநகராட்சி சார்பாக தனியாக ஒரு இணையதளம் துவங்கி, அதில் எந்த பொருட்களை கொண்டுவர எந்த துறைகளை அணுக வேண்டும் என பொருள் ரீதியாகவும், எந்த துறையில் என்னென்ன பொருட்களை கொண்டு வர அணுகலாம் என்பது குறித்த விவரம், அம்மா வாரச்சந்தை தொடர்பான அண்மை விவரங்கள் பதிவு செய்யப்படும்.
11. அம்மா வாரச் சந்தையில் விற்போரும், நுகர்வோரும் பயன்பெறும் வண்ணம் மாநகராட்சியின் பொதுசுகாதாரத்துறை மூலம் அவசர உதவிக்கு ஏற்பாடு செய்யப்படும்.

இக்கூட்டத்தில் துணை ஆணையர் (பணிகள்) திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவீண் பி. நாயர், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத் குமார், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**